மேட்டுப்பாளையத்தில் யானைகள் புத்துணர்வு முகாம் நடத்த எதிர்ப்பு

கோவை, செப். 7: கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் யானைகள் புத்துணர்வு முகாம் நடத்தக்கூடாது என்று விவசாயிகள் சங்கத்தினர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர்.

கோவை மாவட்ட பொதுமக்கள் வாராந்திர குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில், பல்வேறு துறை அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதில், தமிழக கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் தி.வேணுகோபால் அளித்துள்ள மனுவில், மேட்டுப்பாளையம் அருகேயுள்ள தேக்கம்பட்டியில் கோயில் யானைகளுக்கு புத்துணர்வு முகாம் நடத்தப்பட்ட காலங்களில், வனத்தில் இருக்கும் யானைகள் அப்பகுதிக்குள் நுழைந்து சேதங்களை விளைவித்து வந்தன.

விவசாயிகளின் போராட்டங்களை அடுத்து கடந்த 5 ஆண்டுகளாக முகாம் நடத்தவில்லை. இந்நிலையில், மீண்டும் முகாம் நடத்தப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. யானைகளுக்கு

மதுக்கரை அருகேயுள்ள தனியார் சிமென்ட் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் நச்சுப் புகையைத் தடுக்கக் கோரி ஆட்சியர் அலுவலகத்துக்கு மனு அளிக்க வந்த பொதுமக்கள்.

முகாம் நடத்த வேண்டுமானால் மேட்டுப்பாளையத்தை தவிர்த்து யானைகள் நடமாட்டம் இல்லாத இடத்தில் நடத்த அரசு முன்வர வேண்டும்.

மேலும், சிறுமுகை, லிங்காபுரம் பகுதியில் விவசாயிகள் வண்டல் மண் எடுத்து வந்த நிலையில் தற்போது வன விலங்குகள் கணக்கெடுப்பு காரணமாக அப்பணிக்கு வனத் துறை தடை விதித்துள்ளது. இதில் இருந்து விவசாயிகளுக்கு விலக்கு அளித்து மண் எடுக்க அனுமதிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூடு: ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்கு காரணமான அதிகாரிகள் மீது தவெக அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் அளித்த மனு விவரம்:

ஸ்டெர்லைட் நிறுவனத்தை எதிர்த்து கடந்த 2018- ஆம் தேதி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில், 13 பேர் கொல்லப்பட்டனர். இது குறித்து விசாரித்த நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையிலான ஆணையம், இந்தக் கொலைகளுக்கு 3 ஐபிஎஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 17 காவல் துறையினர், மாவட்ட ஆட்சியர், 3 வட்டாட்சியர்களே காரணம் என்று குற்றஞ்சாட்டியிருந்தது.

இந்நிலையில், இது தொடர்பான வழக்கில் கடந்த மாதம் உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்துள்ள கருத்துகள், கொலைக்குக் காரணமான அதிகாரிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இருக்கிறது. அரசு அமைப்புகள் ஆளுங்கட்சிகளின் அடக்குமுறைக் கருவிகளாக இருப்பதை இது வெளிப்படுத்துகிறது.

எனவே, தமிழக அரசு முந்தைய திமுக அரசின் நிலையை மறுபரிசீலனைக்குள்படுத்தி 13 பேர் உயிரிழப்புக்கு காரணமான அதிகாரிகள் மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெருநாய்கள் தொல்லையை கட்டுப்படுத்த வேண்டும்: கோவை சுந்தராபுரம், அஷ்டலட்சுமி நகரைச் சேர்ந்த ஏ.நூர்முகமது என்பவர், எங்கள் பகுதியில் தெருநாய்களின் தொல்லை அதிகமாக இருப்பதால் நடந்து செல்லும் பெண்கள், குழந்தைகளை நாய்கள் துரத்துவதால் அசம்பாவிதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, தெருநாய்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

சிமென்ட் நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்க கோரிக்கை: மதுக்கரை குரும்பபாளையம் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் அளித்துள்ள மனுவில், எங்கள் பகுதியில் செயல்படும் சிமென்ட் தொழிற்சாலையால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் காற்று மாசுவால் கடுமையான சிரமத்துக்கு ஆளாகிறோம்.

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு பலமுறை புகார் அளித்தும் சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே, இது தொடர்பாக விசாரணை நடத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலில் இரும்புக் கம்பி குத்திய யானைக்கு சிகிச்சை

சிகிச்சை அளிக்கப்பட்ட யானை.

மேட்டுப்பாளையம், செப். 7: சிறுமுகை அருகேயுள்ள வனத்தில் காலில் இரும்புக் கம்பியுடன் உலவிய யானைக்கு வனத் துறையினர், மருத்துவக் குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

மேட்டுப்பாளையம் அருகே சிறுமுகை வனச் சரகத்துக்குள்பட்ட பெத்திக்குட்டை பிரிவு பகுதியில் பெண் யானையின் இடது முன்னங்காலில் இரும்பு கம்பி சிக்கி இருப்பதை ரோந்து சென்ற வனத் துறையினர் அண்மையில் கண்டறிந்தனர்.

இதையடுத்து, கோவை மாவட்ட வன அலுவலர் தலைமையில் 5 வன கால்நடை மருத்துவர்கள் குழுவின் மூலம் 60 வனப் பணியாளர்கள், யானை பாகன்கள் மற்றும் ட்ரோன் கேமரா உதவியுடன் யானையின் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, யானைக்கு மயக்க ஊசி செலுத்திய வனத் துறையினர், அதன் காலில் குத்தியிருந்த இருப்புக் கம்பியை அகற்றி சிகிச்சை அளித்தனர்.

தற்போது யானை நலமுடன் உலவி வரும் நிலையில், அதை வனத் துறையினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

முதல்வரின் பதிலுரை ஏமாற்றம் அளிக்கிறது

கோவை, செப். 7: காவல் துறையின் மானியக் கோரிக்கை தொடர்பான முதல்வரின் பதிலுரை ஏமாற்றம் அளிக்கிறது என்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கே.கிருஷ்ணசாமி கூறினார்.

இது தொடர்பாக அவர் கோவையில் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியதாவது: சட்டப் பேரவையில் நடைபெற்ற காவல் துறை மானியக் கோரிக்கையில், கடந்த 4 மாதங்களாக நடைபெற்று வரும் சட்டம் - ஒழுங்கு பிரச்னைகள், கொலை, கொள்ளை, போதை ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், பெண்கள், ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிரான செயல்களுக்கு என்ன மாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப் போகிறார் என்பது குறித்தும் முதல்வர் ச.ஜோசப் விஜய் பேசுவார் என்று எதிர்பார்த்திருந்த மக்களுக்கு அவரது பதிலுரை ஏமாற்றம் அளித்திருக்கிறது.

திமுகவை தாக்கிப் பேசுவதற்காகவே சட்டப் பேரவை நிகழ்வை அவர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஊழல் வழக்குகளில் சிக்கி சிறை சென்றுள்ளார். அதுபற்றி ஏன் அவர் பேசவில்லை? அதிமுகவில் இருந்து தவெகவுக்கு சென்றுள்ள முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.விஜயபாஸ்கர், சி.வி ஜயபாஸ்கர் ஆகியோரை வைத்துக் கொண்டு முதல்வர் எப்படி ஊழல் எதிர்ப்பு பற்றி பேச முடிகிறது?

அமலாக்கத் துறை போன்ற மத்திய அரசின் நிறுவனங்கள் தாக்கல் செய்யும் ஆவணங்களை வைத்து மட்டுமே ஒருவரை குற்றவாளி என்று கூறிவிட முடியாது. முதல்வர் நடுநிலையானவராக இருந்தால், உண்மையிலேயே ஊழலுக்கு எதிரானவராக இருந்தால் தவறு செய்தவர்கள் மீது சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

ஆர்ப்பாட்டம்...

ஊதிய உயர்வு, பணி நிரந்தரம், காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் திங்கள்கிழமை கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அங்கன்வாடி ஊழியர்கள், உதவியாளர்கள்.

சூலூர் அருகே தலையில் கல்லைப் போட்டு இளைஞர் கொலை

சூலூர், செப். 7: சூலூர் அருகே தலையில் கல்லைப் போட்டு இளைஞர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சூலூர் அருகேயுள்ள பாப்பம்பட்டி நந்தினி நகர் பகுதியில் வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்ட நிலம் உள்ளது. இந்த நிலத்தில் சிங்காநல்லூரைச் சேர்ந்த குருநாதன் என்பவர் தகரக் கொட்டகை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், அவர் திங்கள்கிழமை காலை வந்தபோது தகரக் கொட்டகைக்குள் முகம் சிதைந்த நிலையில் இளைஞரிடம் சடலமும், அருகே பெரிய கல்லும் கிடந்துள்ளது. அதிர்ச்சி அடைந்த அவர் இது குறித்து சூலூர் போலீஸாருக்கு தகவல் தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார், சடலத்தை மீட்டு கூறாய்வுக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

இது குறித்து போலீஸார் கூறுகையில், கொலை செய்யப்பட்ட நபருக்கு சுமார் 30 வயது இருக்கும், அவரின் கையில் ராமேஸ்வர் என பச்சை குத்தப்பட்டுள்ளது. மேலும், அவர் யார், எந்த ஊரைச் சேர்ந்தவர், கொலை செய்யப்பட்டதற்கான காரணம் என்ன என்பது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறோம் என்றனர்.

தற்காலிக பட்டாசுக் கடைகளுக்கும் ஜிஎஸ்டி கட்டாயம்

வணிக வரித் துறை அதிகாரிகள்

கோவை வணிக வரித் துறை அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற ஜிஎஸ்டி குறித்த விழிப்புணர்வுக் கூட்டத்தில் பங்கேற்ற வியாபாரிகள்.

கோவை, செப். 7: கோவை மாநகரில் தீபாவளி பண்டிகைக்கு தற்காலிக பட்டாசுக் கடைகள் நடத்துபவர்களும் ஜிஎஸ்டி பதிவு செய்து முன்கூட்டியே வரி செலுத்த வேண்டும் என்று வணிக வரித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தீபாவளி பண்டிகை நவம்பர் 8 -ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில், கோவை மாநகரில் தற்காலிக பட்டாசுக் கடைகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்று மாநகர காவல் துறை அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு முதல் ஜிஎஸ்டி பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே கடை நடத்த அனுமதி அளிக்கப்படும் என்றும், ஒரு வியாபாரி அதிகபட்சம் ஒரு கடை நடத்துவதற்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என்றும் காவல் துறை அறிவித்துள்ளது.

இந்நிலையில், கோவை மாவட்ட பட்டாசு வணிகர்கள் நலச் சங்கம் சார்பில் ஜிஎஸ்டி குறித்த விழிப்புணர்வுக் கூட்டம் டாக்டர் பாலசுந்தரம் சாலையில் உள்ள வணிக வரித் துறை அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் கல்யாணசுந்தரம், செயலர் பிரபு உள்ளிட்ட நிர்வாகிகள், வியாபாரிகள் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில், வணிக வரித் துறை அதிகாரிகள் வெங்கடேஷ், சுகுமார் ஆகியோர் பங்கேற்று ஜிஎஸ்டி பதிவு செய்வது, வரி செலுத்துவது உள்ளிட்டவை குறித்து விளக்கினர்.

அவர்கள் பேசும்போது, ஏற்கெனவே ஜிஎஸ்டி பதிவு உள்ளவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இல்லாதவர்கள் தற்காலிகமாக ஜிஎஸ்டி பெற்றுத்தான் இந்தத் தொழிலில் ஈடுபட வேண்டும். மேலும், பட்டாசுக்கு கட்டாயமாக 18 சதவீத வரி செலுத்தப்பட வேண்டும். கடை திறக்கும் முன்பே ஜிஎஸ்டி பதிவு பெற்றாக வேண்டும்.

ஒவ்வொரு விற்பனையையும் முறையாக பதிவு செய்ய வேண்டும். தீபாவளி முடிந்த பிறகு டிசம்பர் 20 -ஆம் தேதிக்குள் தற்காலிக கணக்கை முறையாக முடிக்க வேண்டும். எவ்வளவு தொகைக்கு வியாபாரம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறதோ அந்தத் தொகைக்கான ஜிஎஸ்டியை முன்கூட்டியே செலுத்த வேண்டும். விற்பனை முடிந்த பிறகு மீதமுள்ள பொருள்களுக்கும் வரி செலுத்த வேண்டும் என்றனர்.

கூட்டத்தில் பங்கேற்ற வியாபாரிகள் பேசும்போது, தற்காலிக பட்டாசு வியாபாரிகளும் ஜிஎஸ்டி பதிவு மேற்கொள்ள வேண்டும் என்று கோவை மாவட்டத்தில் மட்டும் கட்டாயப்படுத்தப்படுவதாகவும், மற்ற மாவட்டங்களில் ஜிஎஸ்டி இல்லாமலேயே கடை நடத்துவதற்கு விண்ணப்பம் பெறப்பட்டிருப்பதாகவும் கூறினர்.

இதைத் தொடர்ந்து, வணிகர்கள் நலச் சங்கத்தின் நிர்வாகிகள், வணிக வரித் துறை இணை ஆணையரை சந்தித்து வியாபாரிகள் எந்தவித நெருக்கடியும் இல்லாமல் தொழில் நடத்துவதற்கு அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும், நிரந்தர ஜிஎஸ்டி வைத்திருப்பவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட கடைகள் நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்தனர்.

சமையல் செய்தபோது ஆடையில் தீப்பிடித்து பெண் உயிரிழப்பு

கோவை, செப். 7: கோவையில் சமையல் செய்வதற்காக அடுப்பை பற்ற வைத்தபோது ஆடையில் தீப்பிடித்து பெண் உயிரிழந்தார்.

கோவை, தெற்கு உக்கடம் விஹெச் சாலையைச் சேர்ந்தவர் குமார். இவரது மனைவி கீதாஞ்சலி (36). இவர் சமையல் செய்வதற்காக கடந்த 5-ஆம் தேதி இரவு மண்ணெண்ணெய் அடுப்பை பற்றவைத்துள்ளார்.

அப்போது, எதிர்பாராதவிதமாக அவரது ஆடையில் தீப்பிடித்து முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. இதையடுத்து, குடும்பத்தினர் அவரை மீட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து காட்டூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கதிர் பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வரவேற்பு

கதிர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வரவேற்பு விழாவில் சிறப்பு விருந்தினர் கவிஞர் கவிதாசனுக்கு நினைவுப் பரிசு வழங்கிய கல்வி நிறுவனத்தின் தலைவர் இ.எஸ்.கதிர்.

கோவை, செப். 7: கோவை கதிர் பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வரவேற்பு விழா நடைபெற்றது.

கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்த விழாவுக்கு கதிர் கல்வி நிறுவனங்களின் தலைவர் இ.எஸ்.கதிர் தலைமை வகித்தார். செயலர் லாவண்யா கதிர் சிறப்புரையாற்றினார். துணைத் தலைவர் கே.எஸ்.மிதிலேஷ் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில், கவிஞர் கவிதாசன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று உரையாற்றினார்.

அவர் பேசும்போது, முதலாம் ஆண்டில் சேர்ந்துள்ள மாணவர்கள் தன்னம்பிக்கை, தலைமைத்துவ பண்புகள், தனிப்பட்ட, தொழில் முறை வளர்ச்சிக்கான நேர்மறையான அணுகுமுறையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். கதிர் பொறியியல் கல்லூரியின் முதல்வர் ஆர்.உதயகுமார் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

அறிவியல், மனிதநேய துறையின் தலைவர் எஸ்.சரவணன் உள்ளிட்ட பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

பொது அறிவிப்பு

திரு/ள். கோவை மெடிக்கல் சென்டர் & ஹாஸ்பிட்டல் லிமிடெட் நிறுவனமானது, கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், காளப்பட்டி கிராமம், க. ச. எண். 751/1, 2N, 2P, 2O, 3A, 3B1, 3B2, 3B3, 3B6A2, 3B6C, 752/1, 2B, 4, 7, 8, 768/2A1, 2A2, 2A3, 2B1, 2B2, 769/4, 5, 6, 8, 9, 10, 11, 770/1 to 11, 12 Part, 13, 16, 17, 18, 19, 771/3A1A2, 3A2, 3B1, 4A2C2, 5B, 6, 7B1A2, 20A2, & 771/21-ல் கூடுதல் மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி கட்டிடங்கள் கட்டுவதற்காக, தமிழ்நாடு சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் (SEIAA), அதன் 03.09.2026 தேதியிட்ட சுற்றுசூழல் அனுமதி அடையாள எண். EC26B3813TN5181894N மூலம் சுற்றுசூழல் அனுமதி பெற்றுள்ளது. அவ்வனுமதியின் நகலை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் இணையதளத்திலும் (https://parivesh.nic.in/) காணலாம்.

திரு/ள். கோவை மெடிக்கல் சென்டர் & ஹாஸ்பிட்டல் லிமிடெட்
99, அவனாசி சாலை, காளப்பட்டி, கோயம்புத்தூர் - 641014.

பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda இந்தியாவின் பன்னாட்டு வங்கி 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா
கிளை : காட்டன் மார்க்கெட்
696, காமராஜ் ரோடு, ஹோட்டல் கௌரி கிருஷ்ணா அருகில், திருப்பூர்,
போன் : 0421-2210008, மின்னஞ்சல் : COTTON@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை -IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ஒருக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)-ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்-ஏல விற்பனை அறிவிப்பு.
கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமின்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தார்(கள்) / அடமானதார்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தார்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் கருக்க விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன்	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைத்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	கவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
M/s. சிண்டிகேட் இம்பெக்ஸ் (கடன்தாரர்), பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள், எண்.5B, வேலன் நகர், RVE தோட்டம், தென்னம்பாளையம், திருப்பூர் மாவட்டம் - 641 604. **திரு. கதிரேசன் அருணாச்சலம் (M/s. சிண்டிகேட் இம்பெக்ஸ்-ன் பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** த/பெ.அருணாச்சலம், N, எண்.28/17, RVE லேயவுட், தென்னம்பாளையம் விரிவாக்கம், திருப்பூர் - 641 604. **திரு. அருணாச்சலம் நாச்சிமுத்து (M/s. சிண்டிகேட் இம்பெக்ஸ்-ன் பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** த/பெ.நாச்சிமுத்து, எண்.28/17, RVE லேயவுட், தென்னம்பாளையம் விரிவாக்கம், திருப்பூர் - 641 604. **திருமதி. திவ்யா கதிரேசன், (M/s. சிண்டிகேட் இம்பெக்ஸ்-ன் பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** க/பெ. கதிரேசன், எண்.28/17, RVE லேயவுட், தென்னம்பாளையம் விரிவாக்கம், திருப்பூர் - 641 604.	சார் பிணையத்திற்குள்ளான தொழிற்சாலை நிலம் மற்றும் கட்டிடம் அமைந்த, திருப்பூர் - 641 604, திருப்பூர் தெற்கு தாலுகா, திருப்பூர் டவுன், நல்லூர் கிராமம், தென்னம்பாளையம், சர்வே எண்.739/2, பழைய டவுன் சர்வே எண்.112/3, புதிய டவுன் சர்வே எண்.10, R.V.E. தோட்டம், டவுன் சர்வே வார்டு எண். F (1, திருப்பூர், 7. நல்லூர்), டவுன் சர்வே பிளாக் எண்.52, மனை எண்.79 மற்றும் 80 வடக்குப் பகுதி, கதவு எண்.5(5)/5B, 5(6)/5C, M/s. சிண்டிகேட் இம்பெக்ஸ் பெயரிலுள்ள சொத்து திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை II சார் பதிவு மாவட்டம், திருப்பூர் தெற்கு தாலுகா, திருப்பூர் டவுன், வார்டு எண்.50, RVE தோட்டம், தென்னம்பாளையம், நல்லூர் கிராமம், சர்வே எண்.739/2, பழைய டவுன் சர்வே எண்.112, பிளாக் எண்.13, வார்டு N, புதிய டவுன் சர்வே எண்.112/3, பிளாக் எண்.13, வார்டு N, புதிய பட்டா எண்.1214, இதில் மேற்படி பகுதியிலுள்ள 32520 சதுரடி நிலத்தின் **எல்லைகள் விபரம் :** R.V.E.மெய்ன்-கடாசல கவுண்டர் தக்க வைத்திருந்து சொத்திற்குக் கிழக்கு, 25 அடி தென்வடல் ரோடுக்கு மேற்கு, N.வசந்தாவிற்குச் சொந்தமான சொத்துக்கு வடக்கு, வேலன் நகர் மெயின் ரோட்டுக்குத் தெற்கு. அளவுகள் : கிழமேல் இருபுறமும் - 120 அடி, தென்வடல் இருபுறமும் - 271 அடி. மொத்தம் 3021.18 சதுர மீட்டர் (32520 சதுரடி) நிலம், 9286 சதுரடி தரைத் தளம் மற்றும் 9286 சதுரடி முதல் தளம் கொண்ட தார்சுக் கட்டிடத்தில், தரைத் தளத்தில் மற்றும் முதல் தளத்தில் 1553 சதுரடி கழிப்பறை தார்சுக் கட்டிடம் மற்றும் தரைத் தளத்தில் 08 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட 2060 சதுரடி சிமெண்ட் ஷீட் கூரைக் கட்டிடம், அதன் கதவுகள், சன்னல்கள், மின்சார பிட்டிங்குகள், குடிநீர் இணைப்பு அங்குள்ள அனைத்துப் பிற பாத்தியதைகளுடன் மேலும் 25 அடி தென்வடல் ரோட்டில் மற்றும் சொத்திற்குச் செல்லும் அனைத்து வழக்கமான ரோடுகளில் உபயோக உரிமைகளுடன். கதவு எண்.5(5)/5B, 5(6)/5C, பின்சார இணைப்பு எண்கள் 03-209-006-1811, 03-209-006-1820, குடிநீர் இணைப்பு எண்.50141545. **அட்சரேகை : 11.086308 தீர்க்கரேகை : 77.350343**	**அனைத்து கடன் வசதிகளுக்குமான நிலுவைத் தொகை : 04.09.2026 தேதியன்று, ரூ.10,18,38,672.11 (ரூபாய் பத்து கோடியே பதினெட்டு லட்சத்து மும்பத்து எட்டாயிரத்து அறுநூற்று எழுபத்து இரண்டு மற்றும் பைசா பதினொன்று மட்டும்)** மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	**15.10.2026** பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.19,50,51,044/- 2. ரூ.1,95,05,104/- 3. ரூ.1,00,000/-	அடையாள (Symbolic) கவாதீனம் வங்கி அடையாளப்பூர்வமாக சொத்தை ஒப்படைக்கும்	**08.10.2026** காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு **https://bankofbaroda.bank.in/e-auction** இணையதளம் 'லிங்க்'கில் மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் **https://baanknet.com** -ல் பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை **போன் : 9585321133** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 05.09.2026
இடம் : கோயம்புத்தூர்

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
பேங்க் ஆஃப் பரோடா

epaper.dinamani.com